Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.21 /2023**

**Deposition of PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாகேந்திரன் | ஜாதி | : |
| த/பெ | :சடையாண்டி | தொழில் | :உதவி இயக்குநர், வேளாண்துறை, வத்தலகுண்டு |
| கிராமம் | :அய்யம்பாளையம் | சமயம் | : |
| தாலுகா | :ஆத்தூர் | வயது | : 48 /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day Of 23.05.2024.

(Accused A1, A2, A4, A5 present. A3 absent. U/s.317 Crpc petition filed and allowed.)

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

புகார் மனுவில் மாதிரி எடுக்கப்பட்ட வழக்கு சொத்தான விதைகளை எந்த முறையில் பாதுகாப்பாக வைத்திருந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விதைக்கட்டுப்பாட்டு விதியில் எந்த முறையில் பாதுகாப்பாக வைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. 30.08.2019 அன்று விதை மாதிரிகளை பகுப்பாய்விற்கு அனுப்பிவைத்தேன். விதை மாதிரிகளை நான் நேரடியாக சென்று பகுப்பாய்விற்கு கொடுத்து வந்தேன். நான் பைக்கில் சென்று திண்டுக்கல்லில் பகுப்பாய்விற்காக விதை மாதிரியை கொடுத்து வந்தேன். நான் நேரடியாக கொண்டு சென்று கொடுத்ததாக புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது தான் விதை பகுப்பாய்விற்கு கொடுத்த கடிதம் என்றால் சரிதான். அது அ.சா.ஆ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் முதலில் தேதி 28 என்று குறிப்பிட்டு விட்டு வேறு பேனாவால் தேதி 29 என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த தேதி வேறு பேனாவால் மாற்றப்பட்டுள்ளது என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்று விதை பகுப்பாய்வு செய்தார்கள் என்றால் 24.09.2019 அன்று பகுப்பாய்வு செய்தார்கள். 30.09.2019 அன்று அறிக்கை அனுப்பி வைத்தார்கள். அந்த அறிக்கையை தபால் மூலம் எங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். பகுப்பாய்வு அறிக்கையை பதிவு தபால் மூலம் எங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். பகுப்பாய்வு அறிக்கையை இந்நீதிமன்றத்தில் சாண்றாவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனுடன் இந்த தேதியில் தான் பெற்றுக்கொண்டேன் என்பதற்கு ஆதாரமாக பதிவு தபால் கவரை நீதிமன்றத்தில் இந்த தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விதை கட்டுப்பாட்டு ஆணையில் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. விதை முளைப்புத்திறன் குறைவாக உள்ளதாக அறிக்கை வந்தவுடன் எதிரிகளுக்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை கடிதம் அனுப்பியுள்ளேன் என்றால் 2 கடிதம் அனுப்பியுள்ளேன். 30.09.2019, 07.02.2020 அன்று விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பினேன். அதற்கான அஞ்சலக ரசீதோ, ஒப்புதல் அட்டையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விதை

கட்டுப்பாட்டு ஆணையில் அவ்வாறு தாக்கல் செய்யுமாறு குறிப்பிடப்படவில்லை. நான் சொன்ன தேதியில் விளக்க கடிதம் எதுவும் எதிரிகளுக்கு அனுப்பவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அஞ்சலக கவர் அனுப்புநர் பெயரில் எங்களது அலுவலக முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடிதத்தில் தேதி 06.05.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அஞ்சலக கவர் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வளம்குன்றா வேளாண்விற்பனை நிலையத்திறக்கு அனுப்பப்பட்ட விற்பனை கடிதமும் 13.05.2020 அன்றுதான் அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அஞ்சலக கவர் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.02.2020 அன்று அனுப்பிய விளக்க கடிதத்திற்கு எதிரிகள் பதில் அறிவிப்பு 18.05.2020 அன்று கொடுத்தார்கள். 1-ஆவது எதிரி 12.06.2020 அன்று பதில் கடிதம் அனுப்பினார். எதிரிகள் பதில் கடித்தில் என்ன விளக்கம் கொடுத்தார்கள் என்றால் எங்களது நிறுவனம் சார்ந்த விதைகள் தரமான விதைககள் என்று விளக்கம் கொடுத்தார்கள். விவசாயிகளிடமிருந்து எந்த ஒரு புகாரும் வரவில்லை என்று விளக்கம் கொடுத்தார்கள். விதைகள் அனைத்தும் தரமான விதைகள் என்றும் முளைப்புத்திறன் 92 சதவீதம் உள்ளது என்று தெலுங்கானா மாநில அரசின் சீட்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்ரேசன் லிமிடெட் வழங்கிய 25.05.2020 அன்று வழங்கிய சான்றிதழ் நகலுடன் விளக்கம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 29.07.2020 தேதியிட்ட எதிரி நிறுவனம் அனுப்பிய பதில் அறிவிப்பு எங்களுக்கு அனுப்படவில்லை. எதிரிகளின் பதில் அறிவிப்பில் நாங்கள் பகுப்பாய்வு செய்து அதன் அறிக்கையை விரைவில் அனுப்புகிறோம் என்று எதிரிகள் தங்களது விளக்க பதிலில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. எதிரிகள் அனுப்பிய பதில் விளக்கத்தில் சட்டபிரிவு 16(2) விதைகள் சட்டத்தின்படி நாங்கள் மாதிரி எடுத்துள்ள லாட் நம்பர்.14903074 -இல் மாதிரி எடுத்து எதிரிகள் பகுப்பாய்விற்கு அனுப்பியுள்ளதாகவும், அதன் அறிக்கை வரும்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் விதை கட்டுப்பாட்டு ஆணையில் அவ்வாறு காத்திருக்க தேவையில்லை என்பதால் நடவடிக்கை எடுத்தோம். புகாரில் எதிரிகளின் பதில் விளக்கம் ஏற்றக்கொள்ளதக்கதல்ல என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்ன காரணத்திற்காக ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று குறிப்பிடப்படவில்லை என்றால் விதைகள் முளைப்புத்திறன் குறைவாக உள்ளதால் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகார் மனுவில் 4-ஆவது பக்கம் கடைசி பாராவில் எதிரிகள் அளித்த பதில் விளக்கம் ஏற்கதக்கதல்ல என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகளின் பதில் விளக்கம் ஏன் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான விளக்கம் எதிரிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கொடுக்கப்பட்ட அஞ்சலக ரசீது, ஒப்புதல் அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விதையை பகுப்பாய்விற்காக திண்டுக்கல் விதை பகுப்பாய்வு மையத்தில் கொடுத்தேன். அதே லாட்டில் உள்ள மற்ற விதைகளை திண்டுக்கல் விதை பகுப்பாய்வில் ஆய்விற்கு கொடுத்தால் அதே முடிவு அறிக்கைதான் வரும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிக்கை விதைகள் பகுப்பாய்வு அறிக்கை நான் மேலே குறிப்பிட்ட லாட்டில் உள்ள விதைகளின் பகுப்பாய்வு அறிக்கை என்றால் சரிதான். அது 19.08.2019 தேதியிட்ட அறிக்கை என்றால் சரிதான். அந்த அறிக்கை எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் விதைகள் பகுப்பாய்வு அறிக்கை 09.10.2019 தேதியிட்ட பகுப்பாய்வு அறிக்கை என்றால்

சரிதான். அதுவும் நான் மேலே சொன்ன லாட்டிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் என்றால் சரிதான். அந்த அறிக்கை எ.சா.ஆ.4 ஆகும். மேற்கண்ட 2 பகுப்பாய்வு அறிக்கைகளும் நான் பகுப்பாய்விற்கு மாதிரி எடுக்கப்படுவதற்கு முன்பும் பின்பும் வழங்கப்பட்ட அறிக்கைகள் என்றால் சரிதான். எனக்கும் பகுப்பாய்வு அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் நல்ல பழக்க வழக்கம் உள்ளதா என்றால் இல்லை அலுவல் முறையில் தெரியும். நான் பகுப்பாய்வுக்கு எடுத்த மாதிரி விதைகள் நல்ல முளைப்புத்தன்னையில் தான் இருந்தது என்றும் பகுப்பாய்வில் உள்ள அலுவலர் எனக்கு வேண்டியவர் என்பதால் அறிக்கையை மாற்றி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. விதை சோதனைக்கு எடுக்கப்பட்ட பின்பு அது காலாவதியாகிவிட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. விதை மாதிரி எடுத்த பின்பு ஒரு வருடம் இரண்டு மாதம் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்ததற்கு நான் தான் பொறுப்பு என்றால் சரியல்ல. வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்ததற்கு விளக்கம் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. உயர் நீதிமன்ற உத்தரவுப்படி வழக்கை காலதாமதமா தாக்கல் செய்வதால் அதற்கான காரணம் குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால் சரிதான். விதை கட்டுப்பாட்டு ஆணைப்படி உரிய காலத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 30.09.2019 அன்று எதிரிகளுக்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியதாக சொல்லியுள்ளேன் அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விதைகள் கட்டுப்பாட்டு ஆணைகளில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. இரண்டாவதாக எதிரிகளுக்கு விளக்கம் கேட்டு அனுப்பிய அறிவிப்பில் 30.09.2019 அன்று விளக்கம் கேட்டு அனுப்பிய கடிதத்திற்கு பதில் விளக்கம் வரவில்லை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு முதல் விளக்கம் கேட்டு அனுப்பிய அறிவிப்பை இரண்டாவது அறிவிப்பில் சொல்லவேண்டிய அவசியமில்லை. 30.09.2019 அன்றும் 07.02.2020 அன்றும் எதிரிகளுக்கு விளக்கம் கேட்டு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட தேதிகளில் அனுப்பியதற்கு சான்றாவணம் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் அறிவிப்பு நகல் மட்டுமே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தேதிகளில் நான் எந்த அறிவிப்பும் எதிரிகளுக்கு கொடுக்கவில்லை என்றும், அலுவலகத்தில் வைத்து வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக மேற்கண்ட தேதிகளில் அறிவிப்பு கொடுத்தது போல பொய்யான கடிதத்தை இந்த நீதிமன்றத்தில் ஏமாற்றும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 30.09.2019 அன்று நான் கொடுத்துள்ள விளக்க கடிதத்திற்கான எண் என்னவென்றால் C/1035/2019 ஆகும். அதே எண்தான 07.02.2020 அன்று அனுப்பபட்டதாக சொல்லப்படும் அறிவிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விளக்கம் கேட்டு அனுப்பும் கடித்ததில் யார் கையெழுத்து போடுவார்கள் என்றால் வேளான் துறை துணை இயக்குநர் போடுவார். அரசு அலுவலாக கடிதம் அனுப்பும்பொழுது கையெழுத்துக்கு கீழ் தேதி குறிப்பிடுவது கட்டாயம் என்றால் சரிதான். எதிரிகளுக்கு விளக்கம் கேட்ட கடிதத்தில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. துணை இயக்குநர் கையொப்பத்திற்கு கீழ் வேறு ஒருவரின் கையொப்பமும் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். அது கடிதத்தை தயார் செய்த கண்காணிப்பாளின் கையொப்பம் ஆகும். துணை இயக்குநரின் கையொப்பத்திற்கு கீழ் 07.12.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு முறைப்படி விளக்கம் கேட்டு கடிதம் கொடுத்தது 06.05.2020 என்றும் நான் இந்த வழக்கிற்காக 07.02.2020 என்று கடிதம் கொடுத்ததாக கடித்தத்தை தயார் செய்துள்ளேன் என்றால் அது தவறு. இந்த வழக்கு தாக்கல் செய்யும்பொழுது விதை காலாவதியாகிவிட்டது என்ற

விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதை தெரிந்து கொண்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் அது கட்டாயம் கிடையாது. நான் தாக்கல் செய்துள்ள புகாரில் இந்த வழக்கை தாக்கல் செய்யும் பொழுது விதைகள் காலாவதியாகிவிட்டது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை அவ்வாறு சொல்லவேண்டிய அவசியமில்லை. விதைகள் காலாவதியாகிய விபரத்தையும், காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்த விபரத்தையும் புகாரில் குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால் சரியல்ல. எதிரிகள் மத்திய பகுப்பாய்விற்கு அனுப்பி உண்மை நிலவரத்தை வெளிப்படுத்திவிடுவார்கள் என்பதற்காக மேற்கண்ட தகவல்களை மறைத்து விதை காலாவதியாக பிறகு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எதிரிகளால் காலதாமதம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் விளக்கம் கொடுக்க காலதாமதம் ஆனதால் தாமதம் ஏற்பட்டது.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/.P.Jaisankar
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.